அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயில்
மயிலாப்பூர், சென்னை 600004

# பங்குனிப் பெருவிழா மற்றும் விடையாற்றி கலை விழா

## அழைப்பிதழ் 2026




**பங்குனிப் பெருவிழா**
22.03.2026 - 02.04.2026

**விடையாற்றி கலை விழா**
03.04.2026 - 12.04.2026



# அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர்

# பங்குனிப் பெருவிழா மற்றும் விடையாற்றி கலை விழா அழைப்பிதழ் 2026

எல்லா உலகங்களுக்கும் நாயகனாய், விறகில் தீயும் பாலில் படு நெய்யும் போல் எங்கும் நிறைந்த சிவபெருமான் தம்மை மெய்யன்பர்கள் வழிபடும் பொருட்டு, பல்வகைத் திருவுருவம் தாங்கி திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய தலங்களுள், தொண்டை நாட்டில் சென்னைப் பகுதியில் கடலை சார்ந்தும், உமாதேவியார் மயில் வடிவம் கொண்டு இறைவனை வழிபட்டதும், அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடல் பெற்றத்தலமும், முருகவேள், நான்முகன், வேதம் (மறை) சுக்கிரன் (வெள்ளி), ராமர் ஆகிய இவர்கள் வழிபட்டு பேறு பெற்றதும், திருஞானசம்பந்தர் என்பை பெண்ணுருவாக்கி அருளியதும், வாயிலார் நாயனார் தோன்றி வழிபட்டு முக்தி பெற்றதும் திருவள்ளுவர் அவதரித்த சிறந்த புண்ணிய தலமுமான திருமயிலையில் எழுந்தருளி உள்ள அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரப் பெருமானுக்கு நடைபெறும் பங்குனிப் பெருவிழா நிகழ்ச்சிகளைக் கண்டு வணங்கி இருமை இன்பத்தையும் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகிறோம்.

மட்டிட்ட புன்னையங் கானல்
மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்
சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர
பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ
பூம்பாவாய்

---

மலிவிழாவீதி மடநல்லார்
மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம்
அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி
யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ
பூம்பாவாய்

---

கானமர் சோலைக் கபாலீச்சரம்
அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச்
செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த
பத்தும் வல்லார்
வானசம் பந்தத் தவரோடும்
வாழ்வாரே

- திருஞானசம்பந்தர்

பல்லாடு தலைசடைமேல் உடையான்
தன்னைப்
பாய்புலித்தோ லுடையானைப் பகவன்
தன்னைச்
சொல்லோடு பொருளனைத்தும் ஆனான்
தன்னைச்
சுடருருவில் என்பறாக் கோலத்தானை
அல்லாத காலனை முன்னடர்த்தான்
தன்னை
ஆலின் கீழ் இருந்தானை அமுதா
னானைக்
கல்லாடை புனைந்தருளும் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்
நானே

- திருநாவுக்கரசர்

---

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்
மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது
செய்வித்தல் கண்ணினால் அவர்
நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன்
வருகென உரைப்பார்

- சேக்கிழார்

இங்ஙனம்

பெ.க. கவெனிதா, பி.ஏ., பி.எல்., எம்.எச்.ஆர்.எம்.
இணை ஆணையர் / செயல் அலுவலர்

P. விஜயகுமார் ரெட்டி
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள்

ரஞ்ஜினி மணியன் | ப.திருநாவுக்கரசு | எம்.பி.மருதமுத்து | C.T. ஆறுமுகம்

மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்

# பங்குனிப் பெருவிழா 2026
## நிகழ்ச்சி நிரல்

| வ.எண் | திருவள்ளுவர் ஆண்டு 2057 | 2026 | கிழமை | காலை மணி | பகல் விழா | இரவு மணி | இரவு விழா |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | பங்குனி 08 | மார்ச் 22 | ஞாயிறு | 10:30 | கிராம தேவதை பூஜை அருள்மிகு கோலவிழி அம்மன் சிறப்பு வழிபாடு | 10:00 | விநாயகர் உற்சவம் நர்த்தன விநாயகர் வெள்ளி மூஷிக வாகன திருவீதி உலா |
| 02 | பங்குனி 09 | மார்ச் 23 | திங்கள் | 05.45<br>06:20-06:50 | கொடியேற்று மண்டபத்தில் இறைவன் எழுந்தருளல்<br>**கொடியேற்றம்**<br>வெள்ளி பவளக்கால் விமானம் | 10:00 | அம்மை மயில் வடிவில் சிவபூஜை காட்சி புன்னைமர வாகனம், கற்பகமர வாகனம், வேங்கைமர வாகனம் |
| 03 | பங்குனி 10 | மார்ச் 24 | செவ்வாய் | 08:30 | வெள்ளி சூரிய வட்டம் | 09:00 | வெள்ளி சந்திர வட்டம், கிளி வாகனம், அன்ன வாகனம் |
| 04 | பங்குனி 11 | மார்ச் 25 | புதன் | 06:00 | **அதிகார நந்தி காட்சி**<br>கந்தருவி வாகனம், கந்தருவன் வாகனம், வெள்ளி மூஷிக வாகனம், வெள்விடை வாகனம்; திருஞானசம்பந்த சுவாமிகள் திருமுலைப்பால் விழா | 09:00 | வெள்ளி பூத வாகனம், பூதகி வாகனம், தாரகாசுர வாகனம் |
| 05 | பங்குனி 12 | மார்ச் 26 | வியாழன் | 08:30 | வெள்ளி புருஷா மிருக வாகனம், வெள்ளி சிங்க வாகனம், புலி வாகனம் | 09:00 | நாக வாகனம், காமதேனு வாகனம், ஆடு வாகனம் |
| 06 | பங்குனி 13 | மார்ச் 27 | வெள்ளி | 09:00 | சவுடல் விமானம் | 11:00 | **வெள்ளி ரிஷப வாகன காட்சி** |

கயிலையே மயிலை! திருச்சிற்றம்பலம் மயிலையே கயிலை!

# பங்குனிப் பெருவிழா 2026
## நிகழ்ச்சி நிரல்

| வ.எண் | திருவள்ளுவர் ஆண்டு 2057 | 2026 | கிழமை | காலை மணி | பகல் விழா | இரவு மணி | இரவு விழா |
|---|---|---|---|---|---|---|---|
| 07 | பங்குனி 14 | மார்ச் 28 | சனி | | பல்லக்கு விழா | 10:00 | ஐந்திருமேனிகள் யானை வாகனங்கள் |
| 08 | பங்குனி 15 | மார்ச் 29 | ஞாயிறு | 06:10<br>06:30 | இறைவன் திருத்தேருக்கு எழுந்தருளல்<br>**திருத்தேர் வடம் பிடித்தல்** | | தேரிலிருந்து இறைவன் திருக்கோயிலுக்கு எழுந்தருளல்; ஐந்திருமேனிகள் விழா |
| 09 | பங்குனி 16 | மார்ச் 30 | திங்கள் | 09:00<br>பிற்பகல் 03:00 | திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளல், என்பை பூம்பாவையாக்கி அருளல்;<br>**வெள்ளி விமானத்தில் இறைவன் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு திருக்காட்சி** | | சந்திரசேகரர் பார்வேட்டை விழா; ஐந்திருமேனிகள் விழா |
| 10 | பங்குனி 17 | மார்ச் 31 | செவ்வாய் | | ஐந்திருமேனிகள் விழா | 06:30 | இறைவன் இரவலர் திருக்கோல விழா; ஐந்திருமேனிகள் விழா |
| 11 | பங்குனி 18 | ஏப்ரல் 01 | புதன் | | திருக்கூத்தப் பெருமான் திருக்காட்சி; ஐந்திருமேனிகள் விழா; தீர்த்தவாரி | 06:00<br>08:30-09:00 | புன்னை மரத்தடியில் உமாதேவியார் மயிலுருவுடன் மாதேவரை வழிபடல்<br>**திருக்கல்யாணம்**<br>கயிலாய ஊர்தி, கொடியிறக்கம், சண்டேஸ்வரர் விழா நிறைவு |
| 12 | பங்குனி 19 | ஏப்ரல் 02 | வியாழன் | | உமா மகேஸ்வரர் தரிசனம் | | பந்தம் பறி விழா |
| 13 | பங்குனி 20 | ஏப்ரல் 03 | வெள்ளி | | விழா நிறைவுத் திருமுழுக்கு | | விடையாற்றித் தொடக்கம் |

குறிப்பு: பெருவிழாவில் பத்து நாட்களிலும் பகல், இரவு காலங்களில் ஐந்திருமேனிகள் திருவீதியுலா நடைபெறும்


பங்குனிப் பெருவிழா 2026

# கிராம தேவதை பூஜை


## அருள்மிகு கோலவிழி அம்மன் சிறப்பு வழிபாடு

ஞாயிறு
காலை
மார்ச்
22









பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகியென்றே
செயிர்அவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே

பங்குனிப் பெருவிழா 2026

# விநாயகர் உற்சவம்

## வெள்ளி மூஷிக வாகனம்

ஞாயிறு
இரவு
10:00
மார்ச்
22






யானை முகத்தான் பொருவிடையான் சேய் அழகார்
மான மணிவண்ணன் மாமருகன் - மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன் என்
உள்ளக் கருத்தின் உளன்

முதல் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# வெள்ளி பவளக்கால் விமானம்


திங்கள்
காலை
மார்ச்
23







**கொடியேற்றம்**
காலை 06:20 - 06:50





அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி

முதல் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# புன்னை மர வாகனம்


திங்கள்
இரவு 10:00

மார்ச்
23









மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

இரண்டாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# வெள்ளி சூரிய வட்டம்

செவ்வாய்
காலை
08:30
மார்ச்
24







சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லையர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச் சரவரே




இரண்டாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# வெள்ளி சந்திர வட்டம்

செவ்வாய்
இரவு
09:00
மார்ச்
24







சந்திரனை மாகங்கைத் திரையால் மோதச்
சடாமகுடத் திருத்துமே சாம வேத
கந்தருவம் விரும்புமே கபால மேந்து
கையனே மெய்யனே கனக மேனிப்
பந்தணவு மெல்விரலாள் பாக னாமே
பசுவேறு மேபரம யோகி யாமே
ஐந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே
அவனாகில் அதிகை வீரட்ட னாமே


மூன்றாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# அதிகார நந்தி காட்சி

புதன்
காலை
06:00
மார்ச்
25





ஆயன நந்தி அழக்கு என்தலை பெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்த என் வாய் பெற்றேன்
காயன நந்தியைக் காண என் கண் பெற்றேன்
சேயன நந்திக்கு என் சீந்தை பெற் றேனே


மூன்றாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026


# வெள்ளி பூத வாகனம்

புதன்
இரவு
09:00
மார்ச்
25









மங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கி லுள்ளார் போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்கு மிடமறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ்சூழப்
புயூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே

நான்காம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# வெள்ளி புருஷா மிருகம்


வியாழன்
காலை
08:30

மார்ச்
26









செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

நான்காம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026


# நாக வாகனம்

வியாழன்
இரவு
09:00
மார்ச்
26









கொக்கரை தாளம் வீணை
பாணிசெய் குழகர் போலும்
அக்கரை யணிவர் போலும்
ஐந்தலை யரவர் போலும்
வக்கரை யமர்வர் போலும்
மாதரை மையல் செய்யும்
நக்கரை யுருவர் போலும்
நாகஈச் சரவ னாரே

ஐந்தாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# சவுடல் விமானம்

வெள்ளி
காலை
09:00
மார்ச்
27







கரிந்தார் இடுகாட்டி லாடுங் கபாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே

ஐந்தாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# வெள்விடை பெருவிழா காட்சி

வெள்ளி
இரவு
11:00
மார்ச்
27





வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே

ஆறாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# பல்லக்கு விழா

சனி
காலை
மார்ச்
28







எம்பிரான் எனக்கமுத
　மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானுந்
　தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த
　காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம
　புரத்துறையும் வானவனே





ஆறாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# யானை வாகனம்

சனி
இரவு
10:00
மார்ச்
28







சினக்குஞ் செம்பவ ளத்திர ளானையார்
மனக்கும் வல்வினை தீர்த்திடு மானையார்
அனைக்கும் அன்புடை யார்மனத் தானையார்
கனைக்கு மானைகண் டீர்கட வூரரே

ஏழாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026


# திருத்தேர்

ஞாயிறு
காலை
மார்ச்
29

இறைவன்
திருத்தேருக்கு
எழுந்தருளல்
காலை 06:10

திருத்தேர்
வடம் பிடித்தல்
காலை
06:30







போழொத்த வெண்மதியஞ் சூடிப் பொலிந்திலங்கு
வேழத் துரிபோர்த்தான் வெள்வளையாள் தான்வெருவ
ஊழித்தீ யன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே

ஏழாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026


# தேரிலிருந்து இறைவன் திருக்கோயிலுக்கு எழுந்தருளல்


ஞாயிறு இரவு
மார்ச் 29





ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற





இரவு
## ஐந்திருமேனிகள் விழா

எட்டாம் நாள்


பங்குனிப் பெருவிழா 2026

# அறுபத்து மூவர் விழா

## வெள்ளி விமானத்தில் இறைறவன் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு திருக்காட்சி

திங்கள்
பிற்பகல்
03:00
மார்ச்
30





காலை

திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளி என்பை பூம்பாவையாக்கி அருளல்





தத்து மூதெயின் மூன்றும் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர் அறு
பத்து மூவர் பத மலர் போற்றுவாம்

எட்டாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# சந்திரசேகரர் பார்வேட்டை விழா


திங்கள் இரவு


மார்ச் 30



இரவு

ஐந்திருமேனிகள் விழா







சந்திர சேகரனே
    யருளாயென்று தண்விசும்பில்
இந்திர னும்முதலா
    இமையோர்கள் தொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும்
    அனலாய்விழ ஓரம்பினால்
மந்தர மேருவில்லா
    வளைத்தானிடம் வக்கரையே

ஒன்பதாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026


# தொட்டி உற்சவம்

செவ்வாய்
காலை


மார்ச்
31








கயிலை நன்மலை யாளுங் கபாலியை
மயிலி யன்மலை மாதின் மணாளனைக்
குயில்ப யில்பொழிற் கோழம்ப மேயவென்
உயிரி னைநினைந் துள்ளம் உருகுமே



## கமல விமானத்தில்

# இரவலர் திருக்கோலம்


செவ்வாய்
மாலை
06:30
மார்ச்
31






இரவு
ஐந்திருமேனிகள்
விழா







கச்சைசேர் அரவர் போலுங்
கறையணி மிடற்றர் போலும்
பிச்சைகொண் டுண்பர் போலும்
பேரரு ளாளர் போலும்
இச்சையால் மலர்கள் தூவி
இரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும்
நாகஈச் சரவ னாரே

பத்தாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# தீர்த்தவாரி

புதன்
காலை
ஏப்ரல்
01









காலை

திருக்கூத்தப் பெருமான் சிவகாமசுந்தரி அம்மன்



மாணிக்கக் கூத்தனை
வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள்
புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச்
சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை
யாரறி வாரே



ஐந்திருமேனிகள் விழா

பத்தாம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026


# திருக்கல்யாணம்

புதன் இரவு
08:30 -
09:00
ஏப்ரல்
01

மாலை 06.00
## உமாதேவியார் மாதேவரை மயிலுருவுடன் வழிபடுதல்



பட்டுடுத்துக் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
ஓதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே






கயிலாய வாகனம்



# உமா மகேஸ்வரர் தரிசனம்

வியாழன்
காலை
ஏப்ரல்
02

நறவ நிறைவண் டறைதார்க் கொன்றை நயந்து நயனத்தால்
சுறவஞ் செறிவண் கொடியோன் உடலம் பொடியா விழிசெய்தான்
புறவம் உறைவண் பதியா மதியார் புரமூன் றெரிசெய்த
இறைவன் அறவன் இமையோ ரேத்த உமையோ டிருந்தானே



பதினோராம் நாள்

பங்குனிப் பெருவிழா 2026

# பந்தம் பறிவிழா

வியாழன் இரவு

ஏப்ரல் 02








சுந்தரமூர்த்தி நாயனார்

காணமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே



கயிலையே மயிலை! திருச்சிற்றம்பலம் மயிலையே கயிலை!

## பங்குனிப் பெருவிழா 2026

# விழாக்கால வேதபாராயணம் மற்றும் தேவாரப் பண்ணிசை ஓதுதல்

**23.03.2026 முதல் 01.04.2026 வரை**

### திருமறையோதல்

திருக்கோயிலிலும் திருவீதி உலாவிலும் காலை, மாலை ப்ரம்மஸ்ரீ **டாக்டர்.ஏ.ஜி.ஸ்ரீனிவாச சாஸ்த்திரிகள்** மற்றும் ப்ரம்மஸ்ரீ **வேங்கடகணபதி கனபாடிகள்** குழுவினரால் வேதபாராயணம் நடைபெறும்

### திருமுறையோதல்

**காலை தேவாரப் பண்ணிசைக்குழுவினர்**
தேவார இசைமணி சங்கரன்கோயில் **மு.பார்வதிநாத ஓதுவார்** குழுவினர் பக்க வாத்தியங்களுடன் காலை இறைவன் திருவீதி உலாவில் தேவாரப் பண்ணிசை நிகழ்த்துவார்கள்

### இரவு திருவீதி தேவாரப் பண்ணிசை ஓதுவாமூர்த்தி குழுவினர்கள்

பண்ணிசைப்பேரறிஞர், கலைமாமணி திருமயிலை **பா.சற்குருநாதன்** ஓதுவார்

திருமுறைக் கலாநிதி திருமயிலை **ச.வாகீசன்** ஓதுவார்
தேவார இசைமணி திருவேற்காடு **சோ.மாசிலாமணி** ஓதுவார்
தேவார இசைமணி புரசைவாக்கம் **க.பிரசன்னா** ஓதுவார்
தேவார இசைமணி வடபழனி **ந.இசக்கிமுத்து** ஓதுவார்
தேவார இசைமணி வடபழனி **த.அருண்கார்த்திக்** ஓதுவார்
தேவார இசைமணி திருவொற்றியூர் **பா.மணிகண்டன்** ஓதுவார்
தேவார இசைமணி அமைந்தகரை **மோ.தமிழரசன்** ஓதுவார்
தேவார இசைமணி கொளத்தூர் **இரா.தமிழ்வேல்** ஓதுவார்

திருமுறைக் கலாநிதி திருக்கழுக்குன்றம் **எஸ்.சொக்கலிங்கம்** ஓதுவார்
திருமுறைக் கலாநிதி திருமுதுகுன்றம் **ப.வைத்தியநாத** ஓதுவார்
தேவார இசைமணி சுவாமிமலை **ச.வடிவேல்** ஓதுவார்
தேவார இசைமணி வேலூர் **க.நிர்மல்குமார்** ஓதுவார்
தேவார இசைமணி இன்னம்பர் **ச.மாணிக்கவாசகன்** ஓதுவார்
தேவார இசைமணி திருவாரூர் **ச.திருநாவுக்கரசு** ஓதுவார்
தேவார இசைமணி நுங்கம்பாக்கம் **ச.முருகன்** ஓதுவார்
தேவார இசைமணி திருக்கழுக்குன்றம் **ச.சக்திவேல்** ஓதுவார்

### பக்க வாத்திய இசைக் கலைஞர்கள்



திரு. **பா.கோகுலகிருஷ்ணன்** - குழலிசை
திரு. **ஆர்.இராஜசேகர்** - நரம்பிசை
திரு. **ஜெ.சௌரிராஜன்**, திரு. **ஜி.வி.குருபரத்வாஜ்** - மிருதங்கம்
திரு. **பி.மகேஷ்** - கஞ்சிரா
திரு. **இரா.கார்த்திக்கேயன்** - சுருதி



தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

கயிலையே மயிலை!　　திருச்சிற்றம்பலம்　　மயிலையே கயிலை!



அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயில்



### பங்குனிப் பெருவிழா 2026

# சிறப்பு நாதஸ்வரம் தவில் நிகழ்ச்சிகள்

**மாலை 06:30 மணி முதல் இரவு 08:00 மணி வரை மற்றும் சுவாமி திருவீதி உலாவில்**

| வ.எண் | தேதி | கிழமை | சிறப்பு நாதஸ்வரம் |
|---|---|---|---|
| 1 | 23.03.2026 | திங்கள் | திருவண்ணாமலை திருக்கோயில் ஆஸ்தான வித்வான்கள் திரு.**T.K.K.காந்தி**, திரு.**T.K.K.நேரு** சகோதரர்கள் குழுவினர் |
| 2 | 24.03.2026 | செவ்வாய் | தாம்பரம் திரு.**A.G.சண்முகம்** அவர்கள் குழுவினர் |
| 3 | 25.03.2026 | புதன் | **காலை:** மாம்பலம் திரு.**S.சேந்தனமுதன்** அவர்கள் குழுவினர்<br>**மாலை:** மாம்பலம் திரு.**M.K.S.நடராஜன்** – திரு.**M.K.S.N.மணிகண்டன்** அவர்கள் குழுவினர் |
| 4 | 26.03.2026 | வியாழன் | சுவாமிமலை திரு.**S.சிவசுப்ரமணியன்** – திரு.**A.ராஜேஷ்** அவர்கள் குழுவினர் |
| 5 | 27.03.2026 | வெள்ளி | அடையாறு திரு.**D.பாலசுப்ரமணியம்** அவர்கள் குழுவினர் |
| 6 | 28.03.2026 | சனி | திருமாகாளம் சகோதரர்கள் திரு.**T.S.பாண்டியன்** – திரு.**T.S.சேதுராமன்** அவர்கள் குழுவினர் |
| 7 | 29.03.2026 | ஞாயிறு | கரிக்கலாம்பாடி திரு.**N.ஐயப்பன்** – திருமதி.**I.புவனேஸ்வரி** அவர்கள் குழுவினர் |
| 8 | 30.03.2026 | திங்கள் | பந்தநல்லூர் திரு.**P.G.D.மணிவண்ணன்** மற்றும் ஆந்திரா திரு.**கனி கிரி மல்லிகார்ஜுனா** அவர்கள் குழுவினர் |
| 9 | 31.03.2026 | செவ்வாய் | சின்னமனூர் திரு.**A.விஜய்கார்த்திகேயன்** – இடும்பாவனம் திரு.**V.பிரகாஷ் இளையராஜா** அவர்கள் குழுவினர் |
| 10 | 01.04.2026 | புதன் | செம்பனார்கோவில் வித்வான் திரு.**S.R.G.S.மோகன்தாஸ்** – திருமயிலை திரு.**K.செல்வம்** அவர்கள் குழுவினர்<br>**இரவு சுவாமி திருவீதி உலா:** முகவீணை கலைஞர்கள் திரு.**S.நவநீதகிருஷ்ணன்**, திரு.**V.சீனிவாசன்** அவர்கள் |

**தினமும் காலை சுவாமி திருவீதி உலாவில் திருக்கோயில் ஆஸ்தான நாதஸ்வரம், தவில் வித்வான்களின் மங்கள இசை நடைபெறும்**

தென்னாடுடைய சிவனே போற்றி!　　எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

கயிலையே மயிலை! திருச்சிற்றம்பலம் மயிலையே கயிலை!

அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயில்

## பங்குனிப் பெருவிழா 2026



# விடையாற்றி கலைவிழா - சொற்பொழிவு



**மாலை 05:00 மணி முதல் 06:00 மணி வரை**

| தேதி | கிழமை | சொற்பொழிவாளர் | தலைப்பு |
|---|---|---|---|
| 03.04.2026 | வெள்ளி | செந்தமிழ் சொல்வித்தகி<br>திருமதி. **கற்பகலட்சுமி சுரேஷ்** அவர்கள் | "அர்ச்சனைப் பாட்டே ஆகும்" |
| 04.04.2026 | சனி | செந்தமிழ் கலாநிதி<br>திரு. **பி.சுவாமிநாதன்** அவர்கள் | "எல்லோரும் இன்புற்றிருக்க" |
| 05.04.2026 | ஞாயிறு | பிரம்மஸ்ரீ டாக்டர்<br>**A.G.ஸ்ரீனிவாச சாஸ்த்திரிகள்** அவர்கள் | "மறைகள் போற்றும் நாயகன்" |
| 06.04.2026 | திங்கள் | முனைவர்<br>திரு. **மா.கி.இரமணன்** அவர்கள் | "பட்டினத்தார்" |
| 07.04.2026 | செவ்வாய் | முனைவர்<br>**உலகநாயகி பழனி** அவர்கள் | "திருமுறை காட்டும் வாழ்வியல்" |
| 08.04.2026 | புதன் | முனைவர்<br>**சிவ. சதீஸ்குமார்** அவர்கள் | "அவனருளாலே அவன் தாள் வணங்கி" |
| 09.04.2026 | வியாழன் | முனைவர்<br>**ஆரூர் சுந்தர்ராமன்** அவர்கள் | "துயர் தீர்க்கும் விகிர்தனார்" |
| 10.04.2026 | வெள்ளி | தருமை ஆதீன புலவர் முனைவர்<br>**மதுசூதனன் கலைச்செல்வன்** அவர்கள் | "சிவாலயப்பெருவிழா" |

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

## பூஜைகால விவரங்கள்

| | |
|---|---|
| திருப்பள்ளியெழுச்சி, கோபூஜை, திருவனந்தல் | காலை 05:30 - 06:00 வரை |
| வைகறை பூஜை | காலை 06:00 - 07:00 வரை |
| காலசந்தி | காலை 08:00 - 09:30 வரை |
| உச்சிகாலம் | மதியம் 11:00 - 12:30 வரை |
| சாயரட்சை | மாலை 04:00 - 06:30 வரை |
| இரண்டாம் கால பூஜை | மாலை 06:30 - 07:00 வரை |
| அர்த்தஜாம பூஜை | இரவு 09:00 - 09:30 வரை |

குறிப்பு: திருவிழா மற்றும் சிறப்பு நாட்களில் பூஜை காலம் மாறுதல் அடையும்

மேலே குறிப்பிட்டுள்ள காலசந்தி மற்றும் உச்சிகால பூஜையில் சேவார்த்திகள் பங்குகொள்ளும் வகையில் உபய கட்டணம் செலுத்தி உபயதாரர்களாக கலந்து கொள்ளலாம். திருக்கோயிலின் வெவ்வேறு சேவைகளில் பங்குகொள்ள விரும்பும் பக்தகோடிகள் அதற்கான கட்டணத்தை கோயில் அலுவலகத்தில் மட்டும் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளும் படி வேண்டுகிறோம். மேலும் மற்ற சேவைகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## திருக்கோயில் இதர சேவைகள்

| சேவை பெயர் | உபய காணிக்கை விவரம் |
|---|---|
| 1. கற்பகாம்பாள்(மூலவர்): | |
| தங்க தாமரை மலர்கள் சாற்றுதல் (செவ்வாய்) | ரூ.300/- |
| தங்க பாவாடை சாற்றுதல் (புதன்) | ரூ.750/- |
| 2. சுக்ர வார அம்மன் | |
| தங்க ரத உலா (தினந்தோறும்) | ரூ.1501/- |

## தானத்தில் சிறந்த தானம் - அன்னதானம்

தினமும் கோயிலில் அன்னதானம் நடைபெறுகிறது. இதில் பங்கு பெற விரும்பும் பக்தர்கள் அதற்கான நன்கொடையை திருக்கோயில் அலுவலகத்தில் மட்டும் செலுத்தி ரசீது பெற வேண்டுகிறோம்.

## திருக்கோயில் தொடர்புக்கு

மின்னஞ்சல் முகவரி: jceochn_1.hrce@tn.gov.in
தொலைபேசி எண்: 044-24641670
வலைதளம்: https://mylaikapaleeswarar.hrce.tn.gov.in

# அருள்மிகு கற்பகாம்பாள் தங்கரதம்


கற்பக விருட்சமாய்
நிறையருள் வழங்கும்
அம்மையின் தங்கத்தேர்
பவனியில் பங்கேற்று சகல
செல்வங்களும் பெற்று
உயர்வோமாக!





# ARULMIGU KAPALEESWARAR KARPAGAMBAL THIRUMANA MANDAPAM

No. 1, Pasumpon Muthuramalingam Salai, R.A.Puram, Chennai - 600028
Phone No: 044-2464 1670, 2461 1356 | Email: kapaleswararmyl@tnhrce.com





| CHARGES | FULL DAY (24hrs) | HALF DAY (12hrs) |
|---|---|---|
| TIME | 02:00 PM to 02:00 PM | 02:00 PM to 02:00 AM |
| RENT | Rs. 7,50,000 | Rs. 3,75,000 |
| GST 18% | Rs. 1,35,000 | Rs. 67,500 |
| TOTAL | Rs. 8,85,000 | Rs. 4,42,500 |
| DEPOSIT | Rs. 3,00,000 | Rs. 1,50,000 |
| ELECTRICITY | Rs. 15/- per unit | Rs. 15/- per unit |
| AIR CONDITIONING | Rs. 80,000 | Rs. 40,000 |
| WATER | Rs. 15,000 | Rs. 7,500 |
| MANDAPAM CLEANING | Rs. 20,000 | Rs. 20,000 |
| VESSELS CLEANING | Rs. 20,000 | Rs. 20,000 |

TERMS & CONDITIONS APPLY

# ARULMIGU KAPALEESWARAR KARPAGAMBAL THIRUMANA MANDAPAM

No 16, Venkatesa Agraharam Road, Mylapore, Chennai - 600004

| CHARGES | FULL DAY (24hrs) | HALF DAY (12hrs) |
|---|---|---|
| TIME | 02.00 PM to 02.00 PM | 02.00 PM to 02.00 AM |
| DEPOSIT | Rs.75,000 | Rs.38,000 |
| RENT | Rs.1,30,000 | Rs.65,000 |
| GST @ 18% | Rs.23,400 | Rs.11,700 |
| TOTAL | Rs.2,28,400 | Rs.1,14,700 |
| | | |
| ITEMS TO BE DEDUCTED FROM THE DEPOSIT AMOUNT | Rs.75,000 | Rs.38,000 |
| E.B CHARGES | Rs. 20/- + GST 18% (per unit) | Rs. 20/- + GST 18% (per unit) |
| AIR CONDITION MAINTENANCE CHARGES | *Rs.10,000/- + GST 18% (Rs.1800)* **Rs.11,800** | *Rs.5,000/- + GST 18% (Rs.900)* **Rs.5,900** |
| MANDAPAM CLEANING | *Rs.10,000/- + GST 18% (Rs.1800)* **Rs.11,800** | *Rs.5,000/- + GST 18% (Rs.900)* **Rs.5,900** |
| VESSELS CLEANING | *Rs.10,000/- + GST 18% (Rs.1080)* **Rs.11,800** | *Rs.5,000/- + GST 18% (Rs.900)* **Rs.5,900** |
| WATER CHARGES | *Rs.6,000/- + GST 18% (Rs.1080)* **Rs.7,080** | *Rs.3,000/- + GST 18% (Rs.540)* **Rs.3,540** |
| VESSELS RENT | Rs.10,000 | Rs.5,000 |
| TEMPLE PRASATHAM | Rs.1,000 | - |
| TABLES AND CHAIRS CHARGES | Rs.5,000 | Rs.2,500 |
| TOTAL | Rs.58,480 | Rs.28,740 |






திருஞானசம்பந்தர்
என்பைப் பெண்ணாக்கல்
உமாதேவியார்
மயில் உருவத்தில் பூசை செய்தல்
வாயிலார் நாயனார்
மனக்கோயிலில் இறைவனை வழிபட